**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | CC 416/2025 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | PW 3 |
| Name | : | செந்தில் |
| Father Name | : | ராமசாமி |
| Village | : | காரை |
| Taluk | : | குன்னம், பெரம்பலூர் மாவட்டம். |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 37 |
| ACCUSED | | சடையப்பன் ஆஜர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.10.2025

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குன்னம் வட்டம், காரை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன சரவணன், ராஜேஷ் ஆகியோர்களை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2 மற்றும் சாட்சி மாமுண்டி ஆகியோர்களை எனக்கு தெரியும். சாட்சி மாமுண்டி தற்பொழுது உயிருடன் இல்லை. விபத்து குறித்து சுமார் 8 வருடங்களுக்கு முன்பு இரவு சுமார் 07.00 மணியளவில் நான் காரை கிராமத்தில் இருந்த பொழுது எனது மைத்துனர் தங்கையன் என்பவர் எனது கொழுந்தியாள் மகன் சரவணன் வண்டியில் அடிப்பட்டு இறந்துவிட்டதாக போனில் தகவல் சொன்னார். தகவல் கிடைத்து நான் விபத்து நடைபெற்ற இடத்திற்கு சென்று பார்த்தேன். நான் பார்த்த பொழுது சரவணனின் தலை சிதறி கிடந்தது. இன்னொரு பையன்

விபத்தில் அடிப்பட்டு அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். விபத்து சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)**

நான் விபத்து சம்பவத்தைக் கேள்விபட்டுதான் சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் சென்ற பின்னர்தான் குமார், முருகேசன் மற்றும் அங்கப்பன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். இருசக்கர வாகனத்தை சரவணன் ஓட்டி சென்றதாக கேள்விபட்டேன். சரவணனிற்கு ஒருபக்க கண்பார்வை தெரியாது என்றால் சரிதான். சரவணனுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்று எனக்கு தெரியாது. சரவணன் சம்பவத்தின்போது தலைக்கவசம் அணிந்து சென்றாரா என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை :– இல்லை**

**ஒப்பம்/– கி. முரளிதரகண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**